# 108 திவ்யதேச ஸ்தலங்கள்



# 35. திருத்தேவனார்த் தொகை (திருநாங்கூர்)



[Google Maps]

**போதலர்ந்த பொழில் சோலைப்**
**புறமெங்கும் பொறு திறைகள்**
**தாதுதிர வந்தலைக்கும்**
**தட மண்ணி தென்கரைமேல்**
**மாதவன் றானுறையுமிடம்**
**வயல் நாங்கை வரிவண்டு**
**தேதென வென்றிசை பாடும்**
**திருத்தேவனார்த் தொகையே – (*1248)***

பெரிய திருமொழி 4-1-1

என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம் திருநாங்கூர் பதினொரு திருப்பதிகளுள் ஒன்று. இதனைக் கீழ்ச்சாலை என்றும் குறிப்பிடுவர். திருநாங்கூரிலிருந்து சுமார் 1 மைல் தொலைவில் மன்னியாற்றின் தென்கரையில் உள்ளது.

ஸ்ரீமந் நாராயணனைச் சேவிக்க (ஸ்ரீமந் நாராயணன் 11 மூர்த்திகளாக திருநாங்கூருக்கு வந்தபோது) தேவர்கள் இந்த இடத்தில் கூட்டம் கூட்டமாய் சபை கூடி நின்றதால் தேவனார்த் தொகை ஆயிற்று.

## மூலவர்

தெய்வநாயகன். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

## தாயார்

கடல் மகள் நாச்சியார்

## உற்சவர்

மாதவப் பெருமாள்

## தாயார்

மாதவ நாயகி

## தீர்த்தம்

சோபன புஷ்கரணி, தேவஸபா புஷ்கரணி

## விமானம்

சோபனவிமானம்

## காட்சி கண்டவர்கள்

வசிஷ்டர்

## சிறப்புக்கள்

1) திருநாங்கூருக்கு எழுந்தருளின 11 எம்பெருமான்களில் இவர் திருவிடவெந்தை (திருவடந்தை) எம்பெருமான் ஆனார்.

2) உற்சவ மூர்த்தியின் பெயரால் மாதவப்பெருமாள் கோவில் என்றே இத்தலம் அழைக்கப்படுகிறது.

மூலவருக்குண்டான தெய்வநாயகன் என்னும் திருநாமம் 108 திவ்யதேச எம்பெருமான்களில் நடுநாட்டுத் திருப்பதியான் திருவஹிந்திரபுரத்துக்கும் பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான வானமாமலைக்கும் (திருச்சீரவரமங்கை) உண்டு.

இதனால்தானோ என்னவோ இத்தலத்து மூலவர் திருநாமத்தினின்றும் உற்சவரின் திருநாமமான மாதவப் பெருமாள் பெயராலேயே இத்தலம் வழங்கப்படுகிறது. திருமங்கையும் தமது பாசுரத்தில் தடமண்ணி தென்கரை மேல் மாதவன்றானுரையுமிடம் என்று மங்களாசாசனம் செய்துள்ளார்.

3) வசிட்டர் இத்தலத்து எம்பெருமானை குறித்து தவமிருந்து பெருமாளைக் கண்டதாக ஐதீஹம்.

4) திருமங்கையாழ்வார் மட்டும் 10 பாக்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

5) இப்பெருமானும் கருட சேவைக்கு எழுந்தருள்வார்.

6) கடல் மகள் நாச்சியார் என்று அழகிய செந்தமிழ் சொல்கொண்ட நாச்சியார் ஆவார், இத்தலத்துப் பிராட்டி.



Sirkazhi
45A
210
Thittai
Uppanar River
Uppanar River
Thirunagari
45A
ovil
45A
Perunthottai
Mangaimadam
Kondathur
Pagasalai
Nangur
Thiruvengadu
Parthanpalli
45A
Manigramam
Melaiyur
Kaveri River
22
Mudikandanallur
Google
Map data ©2015 Google